# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 155/நகராட்சி/2018**

**நாள் : 01/10/2018**

**திரு ஃ பஹீம் அகமத். A,**
**ஆம்பூர் – 635 802.** — **முறையீட்டு மனுதாரர்**

**திரு வெ. சிவக்குமார்,**
**சுகாதார ஆய்வாளர்,**
**ஆம்பூர் நகராட்சி, ஆம்பூர்.** — **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், ஆம்பூர், பாங்கி பாடின் கொல்லைத் தெரு, 84/19 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A. ஃ பஹீம் அகமத் அவர்களின் 23.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2018 அன்று பெறப்பட்டு 155/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆம்பூர், பாங்கி பாடின் கொல்லைத் தெரு, 84/19 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A. ஃ பஹீம் அகமத் என்பவர், ஆம்பூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு வெ. சிவகுமார், தனக்கு உள்நோக்கத்துடன் தனது வீட்டின் அருகில் உள்ள மேல்மாடி கட்டடத்தில் ஷூ மற்றும் தோல் சம்பந்தமான தொழில் பட்டறை எதுவும் இல்லை என பொய்யான தகவல் கொடுத்ததற்காக நடவடிக்கை எடுக்கக் கோரி ஆம்பூர் நகராட்சிக்கு புகார் தெரிவித்ததாகவும், ஆனால் அவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. ஆம்பூர் நகராட்சி ஆணையர் தனது 20.01.2015 நாளிட்ட கடிதம் எண்.192/இ2/2014–இல், மனுதாரரின் வீட்டுக்கருகில் உள்ள மேல்மாடிக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாகத் குறிப்பிடப்பட்ட ஷூ மற்றும் தோல் சம்பந்தப்பட்ட தொழில் பட்டறை விவரங்கள் குறித்த விவரங்களை பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேட்டினை பார்வையிட்டு தேவையரன விவரங்களை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். எனவே, சம்பந்தப்பட்ட பதிவேட்டினை பார்வையிட்டு அப்பதிவேட்டில் உள்ள விவரங்களைக் கண்டறிய முறையீட்டு

மனுதாரருக்கு வாய்ப்பளிக்கப்படாத நிலையில், நகராட்சி அலுவலர்கள் எதிர்மனுதாரரான திரு சிவக்குமாருக்கு ஆதரவாக செயல்படுகின்றனர் எனத் தனது ஆதங்கத்தினை தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மனு செய்துள்ளார். மேலும், தனக்குத் தெரிந்தவரை சம்பந்தப்பட்ட கட்டடத்தில் திரு ஆதம் ஷெரிப் என்பவர் 2006–ஆம் ஆண்டிலிருந்து தோல் சம்பந்தமான இரண்டு கடைகள் நடத்தி வருவதாகவும், தோல்களை சரி செய்ய சம்மட்டியால் அடிப்பதால் "Noise Pollution" ஏற்படுகிறது என்று புகார் கொடுத்ததாகவும், அது சம்பந்தமாக திரு சிவக்குமார் உள்நோக்கத்துடன் செயல்பட்டு பொய்யான ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரர், தனது வீட்டின் அருகில் உள்ள மேல்மாடிக் கட்டடத்தில் தோல் சம்பந்தமான பட்டறையிலிருந்து ஏற்படும் ஒலிமாசுவை (Noise pollution) கட்டுப்படுத்த தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்திற்கு முறையாக மனுச் செய்து கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆம்பூர் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் தொழில் உரிமம் சம்பந்தப்பட்ட பதிவேட்டினை பார்வையிட மனுதாரருக்கு அனுமதி அளித்து, மனுதாரர் குறிப்பிடும் கட்டடத்தில் செயல்படும் தோல்பட்டறை குறித்த விவரங்களை வழங்கவும் ஆம்பூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 1 –ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு A ஃ பஹீம் அகமத்,
84/19, பாங்கி பாடின் கொல்லை தெரு,
ஆம்பூர் – 635 802.
வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
ஆம்பூர் நகராட்சி,
ஆம்பூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி